[1974 மார்ச் 20

*514 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளைஞர் அணித் தொண்டர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இளைஞர் அணிக்கு 1971-72-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட தொண்டர்களின் பதவிக் காலம் மேலும் ஓர் ஆண்டு நீடிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. ராமசாமி: தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் பணி புரிகின்றவர்கள் சர்வீஸ் கமிஷன் தேர்விலே கலந்து கொள்ளும்பொழுது அவர்களுக்கு என்று ஏதாவது தனிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அவர்களுக்கு அரசுப் பணிகளில் தெரிந்தெடுப்பதில் முன்னுரிமை வழங்கப்படும். உச்ச வயது வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் பணி புரிந்த காலத்தை (இரண்டு ஆண்டுகள் வரை) கழித்துவிடுமாறு வயது சலுகையும் அளிக்கப்படும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இளைஞர் அணி யிலே இருக்கக் கூடியவர்களுக்கு வேலை நிரந்தரமாகக் கொடுக்கப் படவில்லை. அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தற்போது அரசைச் சேர்ந்த இடங்களிலே அவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. உச்ச வயது வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் பணி புரிந்த காலத்தை (இரண்டு ஆண்டுகள் வரை) கழித்து விடுமாறு வயது சலுகையும் அளிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இளைஞர் அணிக்கு ஆள் எடுக்கின்ற நேரத்தில் மாவட்டத்திலே உள்ள மக்கள் தொடர்பு அதிகாரிகளும் மற்றவர்களும் சேர்ந்து எடுக் கிறார்கள். தற்போது வேலையில்லாமல் பல பேர்கள் வேலை தேடித் தரும் அலுவலகங்களில் பதிவுசெய்து வைத்து இருக்கிறார்கள். அப்படி அங்கே பதிவுசெய்து வைத்திருக்கக்கூடியவர்களுக்கு

1974 மார்ச் 20]

தகுதியுள்ளவர்களாக இருந்தால் அவர்களை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யாமல் இருக்கிறதே, அதற்கு எதாவது காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: காரணம் எதுவும் இல்லை. உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இளைஞர் அணியிலே வயதின் அடிப்படையில் அவர்களுக்கு மாற்றுவேலை கொடுக்கிற திட்டம் இருக்கிறதா? வயது வரம்பை தாண்டக்கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நான் எற்கனவே சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு முன்னுரிமை மட்டுமல்ல, உச்ச வயதுவரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் பணி புரிந்த காலத்தை (இரண்டு ஆண்டுகள் வரை) கழித்து விடுமாறு வயது சலுகையும் அளிக்கப்படும்.

திரு. த. சோணையா: தலைவர் அவர்களே, இளைஞர் அணியிலே இருப்பவர்களுக்கு மாற்றுவேலை எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல இயலுமா? ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாறுதல் கோரினால் மாற்றிக் கொடுக்க விதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விகளுக்கு தற்போது விவரங்கள் இல்லை. சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. மாற்று வேலை எதுவாக இருந்தாலும் முன்னுரிமை தரப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், யூத் சர்வீஸில் ஒரு மாதம் வேலை செய்துவிட்டு, பிறகு சர்விஸ் கமிஷன் வேலை கொடுத்தால் அங்கே அவர்கள் போகும்பொழுது இங்கே வாங்கிய ரூபாய் 175-ஐயும் கண்டிப்பாக கட்டியாகவேண்டும் என்று சொல்லுகிறார்களே, அதைக் கட்டாமல் இருக்கும்படி அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பரிந்துரையை நினைவில் வைத்து சந்தர்ப்பம் வரும்போது பரிசீலனை செய்யப்படும்,

[1974 மார்ச் 20

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இளைஞர் அணியிலே இளைஞர்கள் எந்த அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு இளைஞர்கள் சேர்க்கப்படுவது நிறுத்தப்படுமென்று கேள்விப்படுகிறோமே, இளைஞர் அணி எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்தப் பணிகள் முடிந்துவிட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இளைஞர் அணியில் பட்டம் பெற்ற ஆண், பெண் இருபாலாரும் சேரலாம், வயது 29-க்குள் இருக்கவேண்டும். அதற்காக மாதம் 173 ரூபாய் கொடுக்கப்படுகிறது, ஒவ்வொரு தொண்டரும் 2 ஆண்டுகள் பணி புரிவார்கள். இதைத்தவிர வேறு விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, இளைஞர் அணியிலே பலவேலைத் திட்டங்கள் இப்பொழுதிருந்தாலும்கூட பெரும் பகுதி நேரத்தில் அவர்கள் சும்மாதான் இருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் சொந்த ஊர்களுக்குப் போய் விடுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலே எழுத்தர்களாகப் பயிற்சி பெறக்கூடிய வகையில் அவர்களை அமர்த்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதுவும் சொல்லப் படுகிறது. அவர்கள் அந்தப் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் துணையாக இருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இளைஞர் அணியிலே மாவட்ட வாரியாக எத்தனை பேர்கள் பணியாற்றுகிறார்கள்? அவர்களுக்கு எந்த விதமான வேலை கொடுக்கப்படுகின்றது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, சில தொண்டர்கள் மாற்றுவேலை கிடைத்ததாலும் மற்ற வேலைகள் காரணமாகவும் பணியிலிருந்து விலகிக்கொண்டார்கள். இதனால் 1971-72 ஆம் ஆண்டிலே பணிக்கு அமர்த்தியதிலே 1,116 ஆண்களும், 118 பெண்களும் தற்போது பணிபுரிந்து கொண்டு வருகின்றனர். மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.